-

<u>**சார்பு நீதிமன்றம், பெருந்துறை**</u>

MCOP No: 75/2022

2025-ம் ஆண்டு ஜூலை மாதம் 24 ம் நாள் Pw1 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 44 வது சட்டம் பிரிவு 6(2)ன்படி திரு.அஷ்பக் அஹமது,பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் | நிஷாந்தி |
| த.பெ/க.பெ | சுரேஷ் |
| கிராமம் | |
| மாவட்டம் | |
| வயது | 31 |

<u>ம.சா. 1 நாள் 24.07.2025</u>

**<u>முதல் விசாரணை:</u> (சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் முதல் விசாரணை செய்யப்படுகிறார்)**

ம.சா.1 ஆகிய நான் இம்மனுவின் மனுதாரர். என் தரப்பு முதல் விசாரணைக்காக நிருபண ஆணையுறுதி வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். நிருபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் தெரியும்.

| | | |
|---|---|---|
| 1 | முதல் தகவல் அறிக்கை | மசாஆ 1 |
| 2 | என் கணவர் சுரேசின் இறப்பு சான்றதழ் | மசாஆ 2 |
| 3 | என் கணவரின் வாரிசு சான்றிதழ் | மசாஆ 3 |

| | | |
|---|---|---|
| 4 | விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் பதிவு சான்றிதழ் | மசாஆ 4 |
| 5 | பிரேத பரிசோதனை அறிக்கை | மசாஆ 5 |
| 6 | காப்பீட்டு சான்றிதழ் | மசாஆ 6 |
| 7 | விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் ஓட்டுநர் உரிமம் | மசாஆ 7 |
| 8 | என் கணவர் பயணம் செய்த வாகனத்தின் பதிவு சான்றிதழ் மற்றும் காப்பீட்டுச் சான்றிதழ் | மசாஆ 8 |
| 9 | எனது மற்றும் 2 ம் மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை நகல் | மசாஆ 9 |

<u>குறுக்கு விசாரணை (1,2 எதிர்மனுதாரர்கள் தரப்பில்)</u>

விபத்து சம்பந்தமாக நான் புகார் கொடுக்கவில்லை. முதல் தகவல் அறிக்கையில் என் கணவர் பயணம் செய்த காரின் ஓட்டுநர் தான் விபத்திற்கு காரணம் என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரி. என் கணவர் பயணம் செய்த கார் என் கணவருக்கு சொந்தமான வாகனமாகும். முதல் தகவல் அறிக்கையில் விபத்திற்கு என் கணவர் பயணம் செய்த வாகனத்தின் ஓட்டுநர் தான் காரணம் என்று சொல்லப்பட்டுள்ளதால் நான் இந்த மனுவை தாக்கல் செய்ய உரிமையில்லை என்றால் சரியல்ல. என் கணவர் பயணம் செய்த கார் ஓடடுநர் டாடா ஏஸ் வாகனத்தின் மீது மோதி அதில் பயணித்த கலியபெருமாள் என்பவர் காயம் ஏற்பட்டு பின்னிட்டு இறந்து விட்டார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். கலியபெருமாள் ன் வாரிசுகள் புதுக்கோட்டை மாவட்ட நீதிமன்றத்தில் இழப்பீடு கோரி தாக்கல் செய்த எம்சிஓபி 146/2022 பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியும். காரின் காப்பீட்டு நிறுவனம் கலியபெருமாளின் வாரிசுகளுக்கு இழப்பீடு வழங்க வேண்டும் என்று தீர்ப்பாகியுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 1,2 எதிர்மனுதாரர்கள் அந்த இழப்பீட்டுத் தொகை பெற்றுக் கொண்டு விட்டனர் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. காரின் ஓட்டுநர் தான் விபத்திற்கு காரணம் என அந்த வழக்கில் முடிவு ஏற்பட்டுள்ளது என்றும், அதை மறைத்து நான்

இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. குற்ற இறுதியறிக்கை கார் ஓட்டுநர் மீது பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் அது பற்றி தெரியாது. 1,2 எதிர்மனுதாரர்கள் இந்த மனுவிற்கு அவசியமற்ற தரப்பினர்கள் என்றால் சரியல்ல. காப்பீட்டு ஒப்பந்தத்தின்படி டாடா ஏஸ் வாகனத்தின் ஓட்டுநர் தவறால் விபத்து ஏற்பட்டது என முடிவு  ஏற்பட்டால்  3ம் எதிாமனுதாரர் வாகனத்தின் காப்பீட்டு நிறுவனம் என்பதன் அடிப்படையில் எங்களுக்கு நஷ்டஈடு கொடுக்க பெறுப்புள்ளது என்றும், 1,2 எதிர்மனுதாரர்கள் பொறுப்பல்ல என்றால் சரியல்ல.

(3ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை, எனவே 3ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது. )

Dictated by me in Open court typed by Typist and read over to the witness and acknowledge by him/her to be correct.

M ASHFAQ AHAMED
Digitally signed by M ASHFAQ AHAMED
Date: 2025.07.24 16:29:36 +0530

Subordinate Judge,
Perundurai.

uploaded by SS